பக்கங்கள்: 08

காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 ஐப்பசி 30 வியாழக்கிழமை 17.11.2022 கதிர் 264

## 'பேஸ்புக்'கில் அவதூறு: சட்டத்தரணி முறைப்பாடு

முகநூலில் எனக்கு எதிராக அவதூறை ஏற்படுத்திய இருவருக்கு எதிராக வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளேன்.

– இவ்வாறு வவுனியா சட்டத்தரணிகள் சங்கத்தின் செயலாளர் சிரேஷ்ட சட்டத்தரணி அன்ரன் புனிதநாயகம் தெரிவித்தார். 2

# மாவீரர் துயிலும் இல்லங்களில் இருந்து படையினர் உடன் வெளியேற வேண்டும்

### நாடாளுமன்றில் கஜேந்திரன் எம்.பி. வலியுறுத்து



**வடக்கு, கிழக்கில் மாவீரர் துயிலும் இல்லங்கள் இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. இதை ஒருபோதும் நாம் அனுமதிக்கமாட்டோம். அங்குள்ள இராணுவத்தினர் உடனடியாக வெளியேறி அந்த இடங்களின் புனிதத்தைப் பேணுவதற்கு இடமளிக்க வேண்டும்.** 2

## மக்களின் காணிகளை சுவீகரிக்க அனுமதியேன்

### மன்னார் ஆயரிடம் ரணில் உறுதி



வடக்கு, கிழக்கில் மக்களின் காணிகள் அவர்களுக்கே சொந்தம். அவற்றை எவரும் ஆக்கிரமித்து வைக்கவோ – அவற்றை எவரும் சுவீகரிக்க முயற்சிக்கவோ நான் இடமளிக்கமாட்டேன். மக்களின் சம்மதமின்றி சுவீகரிக்கப்பட்டு இன்னமும் 2

## ஆஸியில் சிக்கிய தனுஷ்கவுக்குப் பிணை




ஆஸ்திரேலியாவில் பாலியல் பலாத்கார குற்றச்சாட்டில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இலங்கை கிரிக்கெட் வீரர் தனுஷ்க குணதிலக்கவை பிணையில் செல்ல சிட்னி நீதிமன்றம் அனுமதித்துள்ளது.

ஒரு இலட்சத்து 50 ஆயிரம் அமெரிக்க டொலர் பிணையில் செல்ல இன்று சிட்னி நீதிமன்றம் உத்தரவிட்டது.

29 வயதுடைய யுவதி ஒருவர் வழங்கிய பாலியல் 2

## அமைச்சுப் பதவி இல்லையேல் 'பட்ஜட்'டைத் தோற்கடிப்போம்

### ரணிலை மிரட்டும் 'மொட்டு'

வரவு – செலவுத் திட்ட வாக்களிப்புக்கு முன்னர் அமைச்சுப் பதவிகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வழங்க வேண்டும். இல்லையேல் நிதி அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி சமர்ப்பித்துள்ள வரவு – செலவுத் திட்டத்தை எதிர்த்து வாக்களிப்பது என்ற நிலைப்பாட்டில் ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர் என்று அறியமுடிகின்றது.

ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் 8

## துப்பாக்கி வெடித்ததில் 4 வயது சிறுவன் சாவு!

வாயு துப்பாக்கி ஒன்று தவறுதலாக வெடித்ததில் 4 வயது சிறுவன் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

கதிர்காமம் – தெடகம பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று கதிர்காமம் பொலிஸார் இன்று தெரிவித்தனர். குறித்த வெடிப்புச் சம்பவத்தில் படுகாயமடைந்த சிறுவன் கராப்பிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போதிலும் அவர் சிகிச்சைபலனின்றி உயிரிழந்துள்ளார் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளைக் கதிர்காமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## ரணிலையும் மஹிந்தவையும் சிறையில் தள்ளியே தீருவோம்

### அநுரகுமார சூளுரை



ஊழல்வாதிகள் ஒருபோதும் இன்னோர் ஊழல்வாதிக்குத் தண்டனை வழங்க மாட்டார்கள். முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவுக்கு இந்நாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தண்டனை வழங்கமாட்டார். அதே போல் ரணிலுக்கு மஹிந்த தண்டனை வழங்கமாட்டார். ஆனால் எங்களுக்கு அதிகாரத்தை வழங்கினால் ஊழல்வாதிகள் அனைவரையும் சிறைக்குள் தள்ளுவோம்.

– இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

'நீங்கள் ஊழல்வாதிகளின் கோப்புக்களை வைத்துள்ளீர்கள். ஆனால், ஊழல்வாதிகள் இதற்கு அஞ்சுவதாக இல்லை. 8

## பாரிய மோசடிக்காரி திலினியை எம்.பியாக்க முயற்சித்த மஹிந்த

### வெளிவந்தது பரபரப்பு தகவல்



கொழும்பில் பாரிய நிதி மோசடியில் ஈடுபட்டார் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள திலினி பிரியமாலியுடன் தொடர்பில் இருந்த பல சக்தி வாய்ந்த அரசியல்வாதிகள் தொடர்பில் முன்னாள் விமானப்படை அதிகாரி கீர்த்தி ரத்நாயக்க தகவல் வெளியிட்டுள்ளார்.

இணைய சேனலொன்றில் இடம்பெற்ற கலந்துரையாடலில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். 2

## பொலிஸார் மீது கல் வீச்சு; 6 பெண்கள் மடக்கிப்பிடிப்பு

அநுராதபுரம், புபுதுபுர பிரதேசத்தில் பொலிஸார் மீது கற்களை வீசி தாக்குதல் நடத்திய 6 பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஹெரோயின் போதைப் பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் நால்வர் கைது செய்யப்பட்ட போதே பொலிஸார் மீது இவ்வாறு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

புபுதுபுர பிரதேசத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 14 கிராம் 220 கிராம் ஹெரோயினுடன் 4 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.

புபுதுபுர பிரதேசத்திலுள்ள வீடொன்றில் வைத்து குறித்த சந்தேகநபர்கள் கைது 2

## பேஸ்புக்கில் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காணி உறுதி மோசடி தொடர்பில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சட்டத்தரணி உட்பட 6 பேர் நீதிமன்ற உத்தரவுக்கமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் குறித்த செய்தியை முகப்புத்தகத்தில் பதிவேற்றம் செய்த இரு நபர்கள் வவுனியாவைச் சேர்ந்த சிரேஷ்ட சட்டத்தரணியும், வவுனியா சட்டத்தரணிகள் சங்கத்தின் செயலாளருமான அன்ரன் புனிதநாயகத்தின் பெயரையும் தங்கள் முகப்புத்தகத்தில் பதிவேற்றம் செய்து அபகீர்த்தியை ஏற்படுத்தியுள்ளனர் என்று முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம், வவுனியா சட்டத்தரணிகள் சங்கத்துக்கும், சட்டத்தரணிகளுக்கும் அவதூறு ஏற்பட்டுள்ளது என்றும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இது தொடர்பில் மான நஷ்ட வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாகவும்வவுனியாசட்டத்தரணிகள் சங்கத்தின் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, குறித்த பொலிஸ் முறைப்பாடு தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்று வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## ஆஸியில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பலாத்கார குற்றச்சாட்டுக்கு அமைய, தனுஷ்க குணதிலக்க கடந்த 6ஆம் திகதி ஆஸ்திரேலியாப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தார்.

இதையடுத்து, தனுஷ்க குணதிலக்கவுக்கான முதலாவது பிணை மனு கடந்த 7ஆம் திகதி நிராகரிக்கப்பட்டிருந்தது.

இந்தநிலையில், இரண்டாவது பிணை விண்ணப்பம் கடந்த 14ஆம் திகதி நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

இரண்டாவது பிணைக் கோரிக்கை மனுவை எதிர்வரும் 8ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளவுள்ளதாக நீதிமன்றம் முன்னதாக அறிவித்திருந்தது.

எனினும், தனுஷ்க குணதிலக்கவின் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் விடுத்த கோரிக்கைக்கு அமைய இன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது.

இதன்போதே, தனுஷ்க குணதிலக்கவை பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதித்துள்ளது.

## பாரிய ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவிக்கையில்,

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவும், ரோஹித அபேகுணவர்தனவும்திலினி பிரியமாலியுடன் நெருங்கியதொடர்புவைத்திருந்தனர். ஒருமுறை அவரைத் தேசியப்பட்டியல் ஊடாக நாடாளுமன்றத்துக்குக் கொண்டுவர முயற்சித்தனர் – என்றார்.

இது தொடர்பான நிதி மோசடி மற்றும் சம்பவத்துடன் தொடர்புடையவர்களுக்கிடையிலான பல பரிவர்த்தனைகளையும் அவர் வெளிப்படுத்தியுள்ளார்.

தான் கூறும் அனைத்து விடயங்களுக்கும் தாம் பொறுப்பு என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## பொலிஸார் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி

செய்யப்பட்டனர். இவ்வாறு கைது செய்யப்பட்ட 4 சந்தேகநபர்களும் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச்செல்லப்பட்ட போது, 6 பெண்கள் பொலிஸாரைக் கற்களால் தாக்கியுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

சம்பவத்தில் காயமடைந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் சிகிச்சைக்காக அனுராதபுரம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

ஹெரோயினுடன்கைது செய்யப்பட்ட 4 சந்தேகநபர்கள் மற்றும் பொலிஸார் மீது தாக்குதல் நடத்திய 6 பெண்கள் ஆகியோரை அனுராதபுரம் நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதபோது தப்பிச் சென்றுள்ள சந்தேகநபர் ஒருவரைக் கைது செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## மக்களின் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விடுவிக்கப்படாமல் இருக்கின்ற காணிகளைப் படிப்படியாக விடுவிக்க நடவடிக்கை எடுப்பேன்.

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

மன்னார் மறைமாவட்ட ஆயர் பிடெல்ஸ் லயனல் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை உள்ளிட்ட குழுவினர் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச்சந்தித்தனர். அந்தச்சந்திப்பிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

இந்தச் சந்திப்பின் போது மன்னார் காணிப் பிரச்சினைகள் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் ஜனாதிபதியிடம் விளக்கமளிக்கப்பட்டன. அவை தொடர்பில் கவனம் செலுத்திய ஜனாதிபதி, அப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காண உடனடியாக நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதியளித்தார். மடு யாத்திரைக்கு வரும் பக்தர்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்து தருவது தொடர்பிலும் விசேட கலந்துரையாடல் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் அருட்தந்தை ஜொய்ஸ் பெப்பி சொசாய், அருட்தந்தை ஆண்டனி சொசாய் உள்ளிட்ட அருட்தந்தையர்கள் மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜெயவர்த்தன ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## மாவீரர் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி

–இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினரான செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.

நாளுமன்றத்தில் நேற்று (16) நடைபெற்ற வரவு – செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றும் போதே கஜேந்திரன் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார். அதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த மாதம் தமிழர்களைப் பொறுத்தவரை முக்கியமான மாதமாக உள்ளது. இந்தத் தீவின் ஆட்சி அதிகாரத்தைப் பிரித்தானியர்களிடம் இருந்து 1948 ஆம் ஆண்டில் சிங்களப் பேரினவாதம் பெற்றுக்கொண்ட பின்னர் தமிழருக்கு எதிரான இனப் படுகொலைகள் திட்டமிட்ட ரீதியில் கட்டவிழ்த்து விடப்பட்டிருந்தன.

1977, 1983 மற்றும் 1987 கலவரங்கள் என்று படுகொலைகள் இடம்பெற்ற நிலையில், அதில் இருந்து தங்களைத் தற்காத்துக்கொள்வதற்காகத் தமிழினம் ஆயுதமேந்திப் போராடியது. அவ்வாறான ஆயுதப் போராட்டம் 37 ஆண்டுகள் நடந்துள்ளன.

இந்த விடுதலைப் போராட்டத்தில் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இளைஞர், யுவதிகள் தங்களின் உயிர்களைத் தியாகம் செய்துள்ளனர். அவர்களை நினைவு கூரும் மாதத்தில் நாங்கள் நிற்கின்றோம். இந்நிலையில் எங்களுக்காக உயிர்நீத்த அந்த மாவீரர்களக்காக ஒருகணம் தலைசாய்துக்கொள் கின்றேன். இந்த இடத்தில் ஜனாதிபதி இருப்பதால் சில விடயங்களை முன் வைக்க விரும்புகின்றேன். நாங்கள் இறந்த உறவுகளைநினைவுகூரும்இவ்வேளையில் அந்த உரிமைகள் மறுக்கப்பட்டு, இராணுவத்தினரினதும் பொலிஸாரினதும் கெடுபிடிகளுக்கு மத்தியிலேயே அவை நடக்கின்றன. மாவீ ரர் துயிலும் இல்லங்கள் பல இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. அந்த இடங்களில் இருந்து இராணுவத்தினர் வெளியேறி புனிதமான இடமாக அவற்றைப் பேணுவதற்காக இடமளிக்க வேண்டும் என்று கேட்பதுடன், நினைவேந்தலை நடத்த பல்லாயிரக்கணக்கான மக்கள் கூட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கின்றேன் – என்றார்.

(மேலும் விரிவான செய்தி 7ஆம் பக்கத்தில்)



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## முளையில் கருகும் பேச்சு?

'முதற்கோணல் முற்றிலும் கோணல்' என்பர்.

தேசிய இனப் பிரச்சனைக்கு தீர்வு காண்பது தொடர்பில் புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் முயற்சி விடயமும் அப்படித்தான் தெரிகின்றது.

ஆரம்பமே நேர்சீராக இல்லை. தாம் தமிழர் தரப்புடன் நடத்தப் போகின்ற பேச்சுத் தொடர்பில் அவரின் அறிவிப்பே பொருத்தப்பாடாகப் படவில்லை.

அதைத் தேசிய இனப் பிரச்சினை என்று சுட்ட அவர் பின்னடிக்கின்றார். குறைந்தபட்சம் வடக்கு – கிழக்குத் தமிழ் மக்களின் பிரச்சினை என்று கூட அவர் குறிப்பிடத் தயாரில்லை.

வடக்கு மக்களின் பிரச்சினை குறித்து அப்பகுதி மக்களின் பிரதிநிதிகளுடன் பேசுவேன் என்கின்றார்.

வடக்குக் கிழக்கை பிரித்து வைத்துத்தான் அவர் பேச முயல்கின்றாரா என்பதில் தெளிவில்லை. பேச்சுக்கான உத்தியோகபூர்வ அழைப்பு வரும்போது தான் அவரின் நிலைப்பாடு தெளிவாகும்.

ஆனால் அந்த உத்தியோக பூர்வ அழைப்பு வருவதாகவும் தெரியவில்லை.

போன வாரம் நாடாளுமன்றத்தில் பேசிய அவர் இந்த வாரத்தில் வடக்கு மக்களின் பிரதிநிதிகளுடன் நேரடியாகப் பேச்சை ஆரம்பிப்பேன் என்றார்.

இப்போது இந்த வாரம் முடிவை நெருங்குகின்றது. இன்னும் அழைப்பே வரவில்லை. பேச்சுக்கான மூச்சையும் காணோம்.

தாமே – தம் பாட்டிலேயே – அடுத்த வாரத்தில் பேச்சு என்று அறிவித்தார். இப்போது கடந்த திங்களன்று 'நீங்கள் (தமிழர் தரப்பு) விரும்பினால் இந்த வாரத்தில் பேசலாம்' என்று சுமந்திரனிடம் தெரிவித்தமை மூலம் பந்தைத் தன் களத்தில் விளையாடாமல் வெளியே தூக்கிப் போடுகின்றார் அவர்.

எப்போது பேசப் போகின்றார், யாருடன் பேச போகின்றார், எது குறித்துப் பேச போகின்றார் என்பவை எல்லாம் தொடர்பில் மயக்கம். தெளிவின்மையே நீடிக்கிறது.

மறுபக்கத்தில் தமிழர் தரப்பிலும் கூட குழப்பத்திற்குக் குறைவில்லை.

ஜனாதிபதியின் அழைப்புத் தொடர்பில் தமிழ்த் தேசிய தரப்புகள் என்று தம்மைக் கூறிக்கொள்ளும் கட்சிகள் இடையேயும் ஒற்றுமை பட்ட நிலைப்பாடு இல்லை. அதற்கான முயற்சிகளும் தடுமாறுகின்றன.

பிரதான கட்சிக்குள் – பிரதான கூட்டமைப்புக்குள் என்பதற்கும் அடுத்த மட்டத்தில் – முக்கிய கட்சியான இலங்கைத் தமிழரசுக் கட்சிக்குள்ளேயே குழப்பம், கால்வாரல், குடுமிப் பிடிச் சண்டை.

அதற்குப் பின்னர் கூட்டமைப்புக்குள்ளும் கூட அதே போன்ற சிக்கல்கள்.

அதற்கப்பால் ஒரு கட்சி சமஷ்டி தீர்வு என முற்கூட்டியே அறிவிக்க வேண்டும் என்ற முன்நிபந்தனையை விதிக்கிறது.

இந்த குழப்பங்கள், களேபரங்கள், இழுபறிகளுக்குள் இந்தப் பேச்சு முயற்சியும் நகரும் போல தெரியவில்லை. அது முளை விட முதலேயே கருகிப் போனாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

# உரங்களை தடை செய்தமை ஒரு முட்டாள்தனமான முடிவு!

## அமைச்சர் ரமேஷ் பத்ரன தெரிவிப்பு



உரங்களைத் தடை செய்யும் முட்டாள்தனமான முடிவால் தேயிலை கைத்தொழில் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது என்பதை தான் ஒப்புக்கொள்வதாக பெருந்தோட்ட கைத்தொழில் மற்றும் கைத்தொழில் அமைச்சர் கலாநிதி ரமேஷ் பத்திரன தெரிவித்தார்.

ஆனால் அமைச்சரவையின் ஒற்றுமை உடைந்து விடும் என்பதால் தான் இது வரை அதை பகிரங்கமாகக் கூறவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

தேயிலை தொழில் பிரச்சினைகள் தொடர்பில் நிலையியற் கட்டளை 27(2) இன் கீழ் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தேயிலை பயிர்ச்செய்கைக்காக ஏற்கனவே 3 ஆயிரம் மெற்றிக் தொன் யூரியா விநியோகிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த ரமேஷ் பத்திரன, உரங்களை இறக்குமதி செய்வதற்கு இறக்குமதி நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் என்ற ரீதியில் இந்த உரத்தடையை முதலில் எதிர்த்தவர் தாம் என்றும் அமைச்சர் கலாநிதி ரமேஷ் பத்திரன தெரிவித்தார்.

# நடுத்தர வருமான நாடுகள்மீது அவசரத் தலையீடு அவசியம்!

## ஜி20 நாடுகளின் தலைவர்கள் அழைப்பு

சில நடுத்தர வருமான நாடுகள் எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடி தொடர்பாக ஜி20 நாடுகள் குழுவின் தலைவர்கள் கவனம் செலுத்தியுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நடுத்தர வருமானம் பெறும் நாடுகள் தங்கள் கடனை நிர்வகிப்பதில் சிக்கல்களை எதிர்கொள்வதாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

எனவே, சில நடுத்தர வருமான நாடுகள் எதிர்கொள்ளும் கடன் நெருக்கடியில் அவசரத் தலையீட்டுக்கு ஜி20 நாடுகளின் தலைவர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.

அதிகாரிகள் மற்றும் தனியார் கடன் வழங்குபவர்கள் உடனடியாக அதற்குப் பதிலளிக்க வேண்டும் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, கடன் மறுசீரமைப்பு தொடர்பாக சீனா மற்றும் ஜப்பான் உள்ளிட்ட பல கடன் வழங்குநர்களிடமிருந்து இலங்கைக்கு அவசரமாக நிதிப் பாதுகாப்பு தேவை என ஜி20 உச்சி மாநாட்டில் பங்கேற்ற தலைவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இலங்கை சர்வதேச நாணய நிதியத்துடன் பணியாளர் மட்ட ஒப்பந்தத்தை எட்டியுள்ளதால், இந்த பாதுகாப்பு அவசரமாகத் தேவைப்படுவதாக அவர்கள் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

# அரச அதிகாரிகள் வேலை செய்யாமல் மக்களை இழுத்தடிக்க வேண்டாமாம்!

## அமைச்சர் பிரசன்ன கோரிக்கை



வேலை செய்யாமல் மக்களை இழுத்தடிப்பதற்காக அல்லாமல் வேலைகளை இலகுவாக்கும் வகையில் சுற்றறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

சில அரச அதிகாரிகள் மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதில் காலதாமதம் செய்வதற்கு சுற்றறிக்கைகளைக் காரணம் காட்டி வருகின்றனர் எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

வரவு – செலவுத் திட்டம் மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பாக அமைச்சின் அதிகாரிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

# ஆணைக்குழுவின் செயற்பாடே தேர்தல் பிற்போடக் காரணம்!

## சாடுகிறார் டிலான் பெரேரா

தேர்தல் ஆணைக்குழுவின் செயற்பாட்டாலேயே உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த முடியாமல் உள்ளதாக சுயாதீன நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் பேசிய அவர், உள்ளூராட்சி மன்றத் தேர்தலை பிற்போடும் அரசாங்கத்தின் முயற்சியை தோல்வியடைச் செய்ய வேண்டும் என்றார்.



தேர்தல் ஆணைக்குழு இல்லாவிட்டால், தேர்தல் திணைக்களம் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை இலகுவாக நடத்தியிருக்கும் என டிலான் பெரேரா தெரிவித்தார்.

சமன் ரத்னாநயக்க உள்ளிட்ட தேர்தல் திணைக்கள அதிகாரிகளுக்கு, உள்ளூராட்சி தேர்தலை நடத்தும் அந்த அதிகாரத்தை எவரும் இல்லாது செய்யக்கூடாது என்று கூறினார். மீறி, அவ்வாறு எவரேனும் செயற்படுவார் களாயின் நாம் நீதிமன்றின் ஊடாக உரிய சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வோம் எனக் குறிப்பிட்டார்.

# ஈரானில் ஹிஜாப் எதிர்ப்புப் போராட்டத்தினிடையே துப்பாக்கிச் சூடு; ஐவர் பலி; பத்துப் பேருக்கு காயம்






இசே, நவ.17

ஹிஜாப் போராட்டங்களால் ஈரானில் பதற்றமான சூழல் காணப்படுகின்ற நிலையில், ஈரானின் தென் மேற்கு நகரமான இசே நகரில் உள்ள சந்தைப் பகுதியில் மர்மநபர்கள் சிலர் போராட்ட சமயத்தில் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் குறைந்தது 5 பேர் கொல்லப்பட்டனர் என்றும், பொதுமக்கள் மற்றும் பாதுகாப்புப் படையினர் உள்பட 10 பேர் காயமடைந்துள்ளனர் என்றும் செய்திகள் வெளியாகியுள்ளன.

மோட்டார் சைக்கிளில் வந்த துப்பாக்கி ஏந்திய நபர்கள் மேற்கொண்ட இந்தத் துப்பாக்கிச் சூட்டில் 3 ஆண்கள், ஒரு பெண் மற்றும் ஒரு சிறுமி உள்பட 5 பேர் உயிரிழந்தனர். அதில் பொலிஸ் அதிகாரிகளும் உள்ளடங்குகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. மேலும் இது ஒரு பயங்கரவாதத் தாக்குதலாக இருக்கக்கூடும் என்றும் அந்நாட்டு ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இந்தத் துப்பாக்கிச் சூட்டுத் தாக்குதல் ஈரானில் நடைபெற்று வரும், நாடு தழுவிய போராட்டங்களுடன் தொடர்புடையதா என்பது குறித்து உடனடியாகத் தெரியவில்லை எனக் கூறப்படுகின்றது.

நேற்று பிற்பகுதியில் இசே நகரின் பல்வேறு பகுதிகளில் கூடிய ஹிஜாபிற்கு எதிரான போராட்டக்காரர்கள் ஈரான் அரசுக்கு எதிரான முழக்கங்களை எழுப்பியமையுடன், பொலிஸார் மீது கற்களையும் வீசியுள்ளனர். போராட்டக்காரர்களை கலைக்க பொலிசார் கண்ணீர் புகை குண்டுகளை வீசினர். இதனால் அந்த பகுதி போர்களம் போல் காட்சி அளித்ததாகக் கூறப்படுகின்றது.

போராட்டக்க களங்களில் ஆயுதத் தாக்குதல்களும் அதிகரித்து வரும் நிலையில், கடந்த மாதம் ஒரு புனித ஸ்தலத்தில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் 12 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. மேலும், இந்த போராட்டங்களின்போது பயங்கரவாதத்தைத் தூண்டும் விதமாக ஆயு தங்களைப் பயன்படுத்தியதாகத் தெரிவித்து, நேற்றையதினம் இரண்டாவதாக ஒருவருக்கு ஈரான் நீதிமன்றம் மரண தண்டனை விதித்து உத்தரவிட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.




# ரஷ்யா மீது கண்டனக் கூட்டறிக்கை ஜி20 மாநாட்டில் வெளியிடப்பட்டது

ஜகார்ட்டா, நவ.17

இந்தோனேசியாவின் பாலி நகரில் நடைபெற்று வருகின்ற ஜி20 உச்சி மாநாட்டில் சீனா, கனடா, பிரான்ஸ், ஜெர்மனி, ஆஸ்திரேலியா, அமெரிக்கா உள்ளிட்ட ஜி-20 அமைப்பில் உறுப்பினர்களாக உள்ள ஆசிய, ஐரோப்பிய நாடுகளை சேர்ந்த பல்வேறு தலைவர்களும் பங்கேற்றுள்ளனர்.

உக்ரைன் போர் மற்றும் அதனால் உலக அளவில் ஏற்பட்டுள்ள தாக்கங்கள் உள்ளிட்ட உலகளாவிய சவால்கள் குறித்து இந்த உச்சிமாநாட்டில் விரிவாக விவாதிக்கப்பட்டுள்ளது. இந்த மாநாட்டில் உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பிற்கு கண்டனம் தெரிவிக்கும் கூட்டறிக்கை

வெளியிடப்பட்டுள்ளதுடன், இந்த கூட்டறிக்கைக்கு ஜி20 நாடுகளின் பெரும்பாலான தலைவர்கள் ஒப்புதல் அளித்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உக்ரைன் போரால் உலக அளவில் எரிசக்தி, உணவு மற்றும் ஸ்திரத்தன்மையில் ஏற்பட்டுள்ள பாதிப்பை உலக தலைவர்கள் கடுமையாக கண்டித்துள்ளனர். இருப்பினும் ரஷ்யாவிற்கு வெளிப்படையாக கண்டனம் தெரிவிக்க இன்னும் சில நாடுகள் தயக்கம் காட்டி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# நைஜீரியாவில் மசகு எண்ணெயை திருடிய வெளிநாட்டவர்கள் கைது!

## இலங்கையர்கள், இந்தியர்களும் அடக்கம்





அபுஜா, நவ.17

நைஜீரியாவில் மசகு எண்ணெய் திருட்டு தொடர்பாக வெளிநாட்டு கப்பல் மற்றும் அதில் இருந்த பல வெளிநாடுகளைச் சேர்ந்த ஊழியர்களை அந்நாட்டு கடற்படையினர் சிறைபிடித்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நைஜீரியாவின் கடற்படை தமது கடற்பரப்பில் சட்டவிரோதமாகச் செயல்பட்டு, அனுமதியின்றி மசகு எண்ணெயை ஏற்றுமதி செய்ய முயன்றதாகக் குற்றம்ப்சாட்டப்பட்ட ஒரு வெளிநாட்டுக் கப்பலைக் கைப்பற்றி அதிலிருந்த 27 பேரை கைது செய்துள்ளது என்று தகவல் வெளியாகி உள்ளது.

இதுதொடர்பாக நைஜீரிய கடற்படையின் செய்தித் தொடர்பாளர் கொமடோர் அடெடோடன் அயோ-வாகன் கூறுகையில், எண்ணெய் வளம் மிக்க நைஜர் டெல்டா பிராந்தியத்தில் உள்ள உள்ளூர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து வெளிநாட்டவர்கள் நீதிமன்ற உத்தரவின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று கூறியுள்ளார்.

அத்துடன், உரிமம் அல்லது அங்கீகாரம் இல்லாமல் மசகு எண்ணெயை ஏற்றுமதி செய்ய முயன்றனர் எனக் குற்றம் சாட்டப்பட்ட பின்னர் சில வெளிநாட்டவர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். அவர்களில் 16 இந்தியர்கள் மற்றும் இலங்கை மற்றும் போலந்து உள்ளிட்ட ஐந்து நாடுகளைச் சேர்ந்த நாட்டவர்களும் அடங்குவர். திருட்டு மற்றும் பைப்லைன் சேதங்களால் நாள் ஒன்றுக்கு 470,000 பீப்பாய்கள் மசகு எண்ணெய்யை நைஜீரியா இழக்கிறது. சமீப காலமாக

பாதுகாப்புப் படைகள் குற்றவாளிகள் மீதான நடவடிக்கையை தீவிரப்படுத்தியுள்ளன என்று அயோ-வாகன் தெரிவித்துள்ளார்.



# பாலியல் குற்றச்சாட்டில் போதகருக்கு 8,638 ஆண்டுகள் சிறைத் தண்டனை!

இஸ்தான்புல், நவ.17

துருக்கி நாட்டில் பாலியல் வன்கொடுமை மற்றும் இராணுவத்தை உளவு பார்த்தல் ஆகிய குற்றச்சாட்டில் உள்வாங்கப்பட்ட மத போதகர் ஒருவருக்கு இஸ்தான்புல் உயர் குற்றவியல் நீதிமன்றம் 8658 ஆண்டுகள் சிறைத்தண்டனை வழங்கி உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. துருக்கியை சேர்ந்தஅட்னான் அக்தார் என்கின்ற மதபோதகர் ஏ9 என்ற தொலைக்காட்சியில் நிகழ்ச்சிகளை நடத்தி புகழ்பெற்றிருந்தமையுடன், பழமைவாத கொள்கைகளை ஆதரிக்கும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கியிருந்தார்.

அவருக்கு எதிராகக் கடந்த ஆண்டு பாலியல் வன்கொடுமை, சிறார்களை பாலியல் துஷ்பிரயோகம் செய்தல், மோசடி எனப் பல குற்றச்சாட்டுகள் பதிவாகி இருந்தது. இந்நிலையில், தற்போது இஸ்தான்புல் உயர் குற்றவியல் நீதிமன்றம் அவருக்கு 8,658 ஆண்டுகள் சிறைத் தண்டனை வழங்கி உள்ளதாகக் கூறப்படுகின்றது.






# சன்னி லியோனின் மீதான வழக்குக்கு கேரள உயர்நீதிமன்றம் தடை விதிப்பு

திருவனந்தபுரம், நவ.17

பொலிவுட் நடிகை சன்னி லியோன், கடந்த நான்கு ஆண்டுகளுக்கு முன்பு கேரள மாநிலம் கோழிக்கோட்டில் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக ஒரு நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்திருந்த நிலையில், அந்த ஒப்பந்தத்தின் விதிமுறைகளின்படி அந்த நிகழ்ச்சியில் சன்னி லியோனால் பங்கேற்க முடியவில்லை.

அதனால் எர்ணாகுளம் மாவட்டத்தைச் சேர்ந்த ஷியாஸ் குஞ்சுமுகமது என்பவர் அளித்த புகாரின் பேரில், மாநில குற்றப்பிரிவு பொலிசார் சன்னி லியோன் மீது வழக்குப் பதிவு செய்து விசாரித்து வருகின்றனர். இந்நிலையில் மாநில குற்றப்பிரிவு பிரிவு பொலிசார் தனக்கு எதிராக தாக்கல் செய்த குற்றப் பத்திரத்தை ரத்து செய்யக் கோரி, கேரள உயர் நீதிமன்றில் சன்னி லியோன் மனுத் தாக்கல் செய்துள்ளார்.

இந்த மனுவை விசாரித்த நீதிபதி ஜியாத் ரஹ்மான், சன்னி லியோன் மீதான மோசடி வழக்கின் விசாரணைக்கு 2 வாரங்களுக்கு தடை விதித்தார்.

மேலும், குற்றப்பிரிவு அதிகாரிகளிடம் நீதிமன்றம் விளக்கம் கோரியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# கொரோனாவுக்கு மத்தியிலும் இந்தியாவுக்கு 15 இலட்சத்துக்கும் அதிகமானோர் வந்தனர்



புதுடெல்லி, நவ.17

இந்தியாவில் கொரோனா பரவல் காரணமாக கடந்த 2020 மற்றும் 2021ஆம் ஆண்டுகளில் சர்வதேச விமான போக்குவரத்துக்குப் பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு இருந்தன. அத்துடன் வெளிநாடுகளில் இருந்து வரும் பயணிகளுக்கும் பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு இருந்தன.

எனினும் கடந்த 2021 ஆம் ஆண்டில் மட்டும் 15.24 லட்சம் வெளிநாட்டினர் இந்தியாவுக்கு வந்திருக்கின்றனர் என உள்துறை அமைச்சகம் தெரிவித்து உள்ளது. இதில் 74.39 சதவீதம் பேர் 10 நாடுகளை சேர்ந்தவர்கள் ஆவர். இந்தியா வந்துள்ள வெளிநாட்டினரில் அமெரிக்கர்களே அதிகம் எனக் கூறப்படுகின்றது. அந்த வகையில் 4.29 லட்சம் அமெரிக்கர்கள் கடந்த ஆண்டு இந்தியா வந்துள்ளனர்.

அடுத்ததாக வங்காளதேசத்தவர்கள் 2.40 லட்சம் பேர், இங்கிலாந்தை சேர்ந்த 1.64 லட்சம் பேர், கனடா மற்றும் நேபாள நாட்டினர் முறையே 80,437 பேர்மற்றும் 52,544 பேரும் இந்தியா வந்துள்ளனர். இதைப்போல ஆப்கானிஸ்தான், ஆஸ்திரேலியா, ஜெர்மனி, போர்ச்சுக்கல், பிரான்ஸ் நாட்டினரும் அதிக அளவில் கடந்த ஆண்டு இந்தியாவுக்கு வந்திருக்கின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




# நாளை மறுதினம் இந்தியா முழுவதும் வங்கி ஊழியர்கள் வேலை நிறுத்தம்

சென்னை, நவ.17

இந்தியாவில் நாடு தழுவிய ரீதியில் வங்கி ஊழியர்கள் நாளை மறுதினம் 19 ஆம் திகதி வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட உள்ளனர் என அகில இந்திய வங்கி ஊழியர்கள் சம்மேளனம் தெரிவித்துள்ளது. இது தொடர்பில் அகில இந்திய வங்கி ஊழியர்கள் சம்மேளனத்தின் பொதுச்செயலாளர் சி.எச்.வெங்கடாச்சலம் கருத்து வெளியிட்டுள்ளார்.

அவர் தெரிவிக்கையில் –

வங்கிக் கிளைகளில் எங்கு கூடுதல் ஊழியர்கள் உள்ளார்களோ அவர்களை ஊழியர் பற்றாக்குறை உள்ள வங்கி கிளைகளுக்கு மாற்ற வேண்டும். இதன் மூலம் அனைத்து கிளைகளிலும் சமமான ஊழியர்கள் இருப்பர்.

ஆனால், சில வங்கிகள் இந்த ஒப்பந்தத்தை மீறி ஊழியர்களை ஒரு ஊரில் இருந்து மற்றொரு ஊருக்குப் பணியிட மாற்றம் செய்கிறது. ஒரு வங்கியில் 3 ஆயிரம் ஊழியர்கள் பணியிட மாற்றம் செய்யப்பட்டனர். இது தொழிலாளர் சட்டத்தை மீறும் செயலாகும்.

சில வங்கிகள் பல்வேறு பணிகளுக்கு அயல் பணி நடவடிக்கை, பொதுமக்களிடம் வைப்புத் தொகை வசூலிக்கும் பணியில் ஈடுபட்ட 240 ஊழியர்களை பணி நீக்கம் செய்தமையுடன் அவர்களுக்கான எவ்வித இழப்பீட்டையும் வழங்கவில்லை. இதற்குத் தீர்வு காணும் வகையில் வேலைநிறுத்தம் செய்வதற்காக வங்கி ஊழியர் சங்கம் சார்பில் முன்கூட்டிய அறிக்கை வழங்கப்பட்டதையடுத்து கடந்த 5ஆம் திகதி மும்பையில் இந்திய வங்கிகள் கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தை நடைபெற்றது.

பின்னர், 10ஆம் திகதி டெல்லியில் தலைமை தொழிலாளர் நலத்துறை ஆணையருடன் பேச்சுவார்த்தை நடைபெற்றது.

இதில், வங்கிகளின் நிர்வாக தரப்பில் யாரும் பங்கேற்கவில்லை. இதற்கிடையே, தலைமை தொழிலாளர் நலத்துறை ஆணையரின் கோரிக்கையை ஏற்று இன்று (நேற்று) வங்கிகள் கூட்டமைப்புடன் மீண்டும் ஒரு சுற்றுப் பேச்சுவார்த்தை நடைபெற்றது.

இப்பேச்சுவார்த்தை தோல்வி அடைந்ததால், ஏற்கனவே திட்டமிட்டப்படி வரும் 19ஆம் திகதி நாடு தழுவிய அளவில் ஒருநாள் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட தீர்மானிக் கப்பட்டு உள்ளது. –என்று அவர் கூறியுள்ளார்.

# சபரிமலை அய்யப்பன் கோவிலில் படி பூசைக்கு 2037 வரை முற்பதிவு

திருவனந்தபுரம், நவ.17

சபரிமலை அய்யப்பன் கோவிலில் அதிக பொருள்செலவில் நடத்தப்படும் படிபூஜைக்கு 2037 அம் ஆண்டு வரை பக்தர்களால் முன்பதிவு செய்யப்பட்டுள்ளதாக திருவிதாங்கூர் தேவஸ்தான தலைவர் அனந்தகோபன் தெரிவித்தார். இது தொடர்பில் பத்திரிகையாளர்களுக்கு அவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

அவர் கூறுகையில், சபரிமலை அய்யப்பன் கோவிலில் மண்டல, மகரவிளக்கு காலம் தவிர மாத பூஜை நாட்களில் படி பூஜை நடத்தப்படுகிறது. இதற்கான கட்டணம்

இந்திய மதிப்பில் ரூபா.75 ஆயிரம் ஆகும். இந்த பூஜைக்கு 2037 ஆம் ஆண்டு வரை பக்தர்கள் முன்பதிவு செய்து உள்ளனர். அதற்கு அடுத்த படியாக உதயாஸ்தமன பூஜைக்கு



ரூபா.40 ஆயிரம் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. இந்த பூஜைக்கு 2024ம் ஆண்டு வரை பக்தர்கள் முன்பதிவு செய்து உள்ளனர். அதே போல் சகஸ்ர கலச பூஜைக்கும் ரூபா.40 ஆயிரம் கட்டணம் செலுத்த வேண்டும். என்று தெரிவித்துள்ளார்.

அத்துடன், தற்போதைய மகரவிளக்கு காலத்தில், தேவைக்கு ஏற்ப அப்பம், அரவணை இருப்பு வைக்கப்பட்டு உள்ளது. 250 மில்லி அளவுள்ள ஒரு டின் அரவணை விலை ரூபா80 ஆகும். அப்பம் ஒரு பொதி ரூபா.35 விலையில் விற்பனை செய்யப்படுகிறது. சபரிமலையில் நேற்று கொட்டும் மழையிலும் பக்தர்கள் தளராமல் சாமி தரிசனம் செய்தனர். மழையில் இருந்து பக்தர்களை பாதுகாக்க கூடுதல் வசதிகள் செய்யப்படும். சன்னிதானத்தில் மின்சார தேவையைப் பூர்த்தி செய்ய தனியார் உதவியுடன் விரைவில் சூரிய சக்தி மூலமான மின் உற்பத்தி செய்யப்படும். – என்றும் அவர் கூறியுள்ளார்.

# பேராசிரியர் பத்மநாதனின் 'திருக்கோணேஸ்வரம்' தொன்மை கூறும் நூலின் அறிமுகம் திருமலையில்











(இரா.ரஜீந்திரமூர்த்தி)

திருகோணமலை திருக்கோணேஸ்வரம் ஆலய பரிபாலன சபையினரின் ஏற்பாட்டில் நேற்று முன் தினம் செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு திரு கோணமலை நகரசபை பொது நூலகத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வேந்தர் தகைசார் பேராசிரியர் சி.பத்மநாதன் எழுதிய வரலாற்றுப் பதிப்பான 'திருக்கோணேஸ் வரம்' எனும் தொல்லியல் சான்றுகளை உள்ளடக்கியதான நூலின் அறிமுக விழா திருக்கோணேஸ் வர ஆலய பரிபாலனசபைத் தலைவரும், சட்டத்தரணியுமான துஷ்யந்தன் தலைமையில் இடம் பெற்றது. நிகழ்வில் வரவேற்புரையை மக்கள் கலை அரங்கின், கலை இலக்கிய செயற்பாட்டாளர் வ.தர்ம பவன் நிகழ்த்தினார். ஊடகவியலாளரும் ஓய்வுபெற்ற அதிபருமான திரு மலை நவம் நூலின் அறிமுக உரை நிகழ்த்த, நூல் தொடர்பான கருத்துரைகளை யாழ்பல் கலைக் கழக தமிழ்துறை மேனாள் பேராசிரியர் சி.சிவலிங்கராஜா, வரலாற்றுத்துறை மேனாள் பேராசிரியர் ப.புஸ்பரெட்ணம் ஆகியோர் நிகழ்த்தினர்.

சமகாலத்தின் மேலான தேவை கருதிய இப்படைப்பின் நூலாசிரியரான யாழ் பல்கலை கழக வேந்தர் தகைசார் பேராசிரியர் சி.பத்மநாதன்அவர்கள்உரையாற்றுகையில்–

ஈழத்துச் சைவ மரபை பொறுத்தவரை திருகோணேஸ் வரம் மிக முக்கியத்துவம் வாய்ந்த தொன்மை வாய்ந்த வரலாற்றுச் சிறப்புகளைத் தன்னகத்தே கொண்ட திருத்தலம். அது திட்டமிட்டு அழிக்கப்பட்டு வருவதிலிருந்தும் பாதுகாக்க வேண்டியது இளைய சமூகத்தினரின் தற்கால தேவை – எனத் தெரிவித்தார்.

இந் நிகழ்வில் சட்டத்தரணிகள், மருத்துவர்கள், இலக்கிய ஆர்வலர்கள், அரச,அரச சார்பற்ற உத்தியோகத்தர் கள், இந்து ஆலய குருமார்கள், ஊடகவியலாளர்கள் உட்பட பலர் கலந்து சிறப்பித்தனர்.

# நுகர்வோர் பாதுகாப்பு குழு சாய்ந்தமருதில் ஸ்தாபிதம்





(கே.எ.ஹமீட்)

சாய்ந்தமருது பிரதேசத்திற்கான நுகர்வோர் பாதுகாப்பு குழு ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

வர்த்தக வணிக மற்றும் உணவுப்பாதுகாப்பு அமைச்சின் ஆலோசனைக்கமைய இக்குழு ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

பிரதேச செயலாளர் எம்.எம்.ஆஷிக் தலைமையில் நேற்றுப் புதன்கிழமை பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் இடம் பெற்ற இந்நிகழ்வில் நுகர்வோர் அதிகார சபையின் உத்தியோகத்தர் ஏ.ஏ.ஏ.சர்பான், திட்டமிடல் உதவிப்பணிப்பாளர் கே.எல்.ஏ.ஹமீட், நிருவாக கிராம உத்தியோகத்தர் எம்.எஸ்.எம்.நளீர், சமூர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் ஏ.சி.எம்.நஜீம், மௌலவி எம்.ஐ. ஆதம்பாவா, முயற்சியாண்மை அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எல்.ஏ.வக்கீல்

உட்பட துறைசார் பிரதிநிதிகள், கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் அலுவலக உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

இங்கு சகல துறைகளையும் உள்ளடக்கியதாக 35 பேர் கொண்ட நுகர்வோர் பாதுகாப்புக்குழுவொன்று தெரிவு செய்யப்பட்டது.

இதில் நுகர்வோருக்கு ஏற்படும் அநீதிகள் தொடர்பில் தகவல்களை வெளிப்படுத்துதல், கடைகள் மற்றும் உணவகங்களில் விலைப் பட்டியல்களைக் காட்சிப்படுத்துதல், உண

வின்மையால் பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களை கண் டறிதல், ஊட்டச்சத்து தொடர்பாக பொது மக்களை விழிப்பூட்டும் செயற்பாடுகள் ஆகியன தொடர்பில் கலந்துரையாடப் பட்டது.

இப்பிரதேசத்திலுள்ள தனவந்தர்கள் மற்றும் தொண்டு நிறுவனங்களோடு இது தொடர்பில் இணைப்புக்களை ஏற்படுத்தி எதிர்காலத்தில் செயற்படுவது தொடர்பாகவும் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

# செவிப்புலனற்றோருக்கு விசேடமாக தேசியப் பட்டியலில் எம்.பி. நியமனம்

## தேர்தல்கள் ஆணையரிடம் கிழக்கில் இருந்து கோரிக்கை





(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

சைகை மொழியைப் பயன்படுத்தும் செவிப்புலனற்ற, வாய்பேசமுடியாத விசேட தேவையுடையோருக்கு நாடாளுமன்றத் தேசியப்பட்டியல் உறுப்புரிமை வழங்கப்படவேண்டும் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் ஜீ. புஞ்சிஹேவாவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தேர்தல் சட்ட மறுசீரமைப்புகள் தொடர்பாக விசேட நாடாளுமன்ற தெரிவுக்குழுவினால் நாடாளுமன்றத்திற்கு முன் மொழிவுகளை சமர்ப்பிக்கும் நோக்குடன் மாவட்ட ரீதியாக சமூகத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தி கருத்துக்களைப் பெற்றுக் கொள்ளும் நிகழ்வு தேர்தல்கள் ஆணைக்குழுவினால் நாடு முழுவதும் இடம்பெற்று வருகின்றது.

இதனடிப்படையில் மட்டக்களப்பில் துறைசார்ந்தோரிடமிரந்து கருத்துக்கள், ஆலோசனைகள் மற்றும் பரிந்துரைகள் பெற்றுக் கொள்ளும் கலந்துரையாடல் அன்மையில் நடாத்தப்பட்டது. இதன்போதே இக்கோரிக்கை சைகைமொழியினைப் பயன்படுத்தும் செவிப்புலனற்ற விசேட தேவையுடையோரால் முன்வைக்கப்பட்டது.

நாட்டில் சைகை மொழியைப் பயன்படுத்தும் விசேட தேவையுடையவர்கள் கணிசமானவர்கள் உள்ளனர். இவர்களின் தேவைகளையும் உரிமைகளையும் பெற்றுக் கொள்ளவென நாடாளுமன்றத்தில் உறுப்புரமை ஒன்று தேவைப்படுகின்றது. இதற்காக எதிர்வரும் நாடாளுமன்றத்தில் தேசியப்பட்டியலினூடாக உறுப்புரிமையினை பெற்றுக் கொள்ள நடவடிக்கையைப் மேற் கொள்ள வேண்டும் என இலங்கைவாழ் செவிப்புலனற்றோர் சாரபாக இக்கோரிக்கை தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் புஞ்சிஹேவாவிடம் விடுக்கப்பட்டது.

# கார்த்திகை மாதத்தை உணர்வுபூர்வமாக வடக்குக் கிழக்கு அனுஷ்டிக்க வேண்டும்

## செல்வராஜா கஜேந்திரன் நாடாளுமன்றில் தெரிவிப்பு



வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்கள் கேளிக்கை நிகழ்வுகளை விடுத்து இந்த மாதத்தை உணர்வுப்பூர்வமாக அனுஷ்டிக்க வேண்டும்.

தமிழ் சமூகத்துக்காக உயிர்நீத்த எமது உறவுகள் துயிலும் இல்லங்களில் உள்ள இராணுவத்தினர் வெளியேற்றப்பட்டு, அதன் புனிதத்தைப் பாதுகாக்க எமக்கு அனுமதி வழங்க வேண்டும் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் சபையில் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று (புதன்கிழமை) இடம் பெற்ற 2023ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

நவம்பர் மாதம் தமிழ் மக்களுக்கு முக்கியமான மாதமாகும். 1948 ஆம் ஆண்டு பிரித்தானியர்களிடமிருந்து சிங்கள பேரினவாதம் நாட்டை பெற்றுக் கொண்டதன் பின்னர் தமிழர்களுக்கு எதிரான இனப் படுகொலை திட்டமிட்ட வகையில் கட்டவிழ்த்து விடப்பட்டது. வன்முறை ஊடாகத் தமிழர்கள் கொல்லப்பட்டார்கள்.

1948 ஆம் ஆண்டு முதல் தமிழர்களுக்கு எதிரான இனப்படுகொலைக்கு எதிராகவே எமது இனம் ஆயுதம் ஏந்தி போராடியது. இந்த ஆயுத போரட்டத்தில் இனத்துக்காக 50 ஆயிரத்துக்கும் அதிகமான தமிழ் இளைஞர், யுவதிகள் உயிர்நீத்துள்ளார்கள். இவர்களை இந்த சந்தர்ப்பத்தில் நினைவு கூர்ந்து சிரம் தாழ்த்திக் கொள்கிறேன்.

இராணுவம், பொலிஸாரின் எதிர்ப்பிற்கு மத்தியில் தான் நாங்கள் இன்றும் எமது உறவுகளை நினைவுகூருகிறோம். உயிர் நீத்தவர்களின் துயிலும் இடங்கள் இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்தில் கொடிகாமம், வெள்ளான்குளம், கோப்பாய் ஆகிய துயிலும் இல்லங்கள், முல்லைத்தீவு மாவட்டத்தில் தேராவில், முல்வாயில் ஆகிய துயிலும் இல்லங்கள், வவுனியா மாவட்டத்தில் ஈச்சம்குளம் துயிலும் இல்லம், மட்டக்களப்பு மாவட்டத்தில் தாண்டியடி துயிலும் இல்லம் இன்றும் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ளன.

இராணுவத்தினர் குடிகொண்டுள்ள துயில் இல்லங்களில் இருந்து அவர்களை வெளியேற்றி துயிலும் இல்லங்களின் புனிதத்தைப் பாதுகாக்க எமக்கு அனுமதி வழங்குமாறு வலியுறுத்துகிறேன். வடக்கு கிழக்கு மக்கள் அனைவரும் இந்த நினை வேந்தலுக்கான அணிதிரள வேண்டும் என்பதையும் கேட்டுக் கொள்கிறேன். வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்கள் கேளிக்கை நிகழ்வுகளைத் தவிர்த்து இந்த மாதத்தை உணர்வுப்பூர்வமாக அனுஷ்டிக்க வேண்டும் என வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்களுக்கு அழைப்பு விடுத்தார்.

## வவுனியாவில் காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கல் தகவல் அறியும் சட்ட மூலம் விவரங்கள் கோரல்!

ஜனாதிபதியின் வவுனியா வருகையின் போது காணி உறுதிப் பத்திரங்கள் வழங்குவது தெடர்பாக தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக தகவல்கள் கோரப்பட்டுள்ளன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 19 ஆம் திகதி வவுனியா மாவட்டத்துக்கு விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ள நிலையிலே அன்றையதினம் காணி உறுதிபத்திரங்கள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், காணி உறுதிபத்திரங்கள் வழங்கப்படுவது தொடர்பாகத் தகவல் அறியும் சட்டம் மூலமாக ஆறு கேள்விகள் அடங்கிய விண்ணப்பம் ஒன்று பிரதேச செயலகத்தில் விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

மேற்படி விண்ணப்பத்திலே வவுனியா மாவட்டத்தில் காணி உறுதிபத்திரங்கள் வழங்கப்படுவதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ள எண்ணிக்கைகள், ஓமந்தை அரச ஊழியர் வீட்டுத்திட்டத்தில் உறுதிப்பத்திரம் வழங்குவதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ள எண்ணிக்கை, ஓமந்தை அரச ஊழியர் வீட்டுத்திட்டத்தில் உறுதிப்பத்திரங்கள் வழங்கப்படத் தெரிவு செய்தவர்களின் பெயர் விவரங்கள், ஓமந்தை அரச ஊழியர் வீட்டுத்திட்டத்தில் உறுதிப்பத்திரம் வழங்கப்பட உள்ளவர்களின் விவரம் மற்றும் தெரிவு செய்யப்பட்ட முறை, ஜனாதிபதியின் விஜயத்தின் போது ஓமந்தை அரச ஊழியர் வீட்டுத்திட்டத்தின் உறுதிப்பத்திரம் வழங்கப்படுவதற்குத் தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர் விவரம், 05 ஆவது கேள்வியில் வழங்கப்பட்டுள்ள உறுதிப்பத்திரத்துக்கான ஆள்கள் தெரிவு செய்யப்பட்டதன் முறைமை ஆகிய கேள்விகளுக்கான பதிலிற்காக தகவல் அறியும் உரிமை சட்ட மூலமாக மாவட்ட செயலகத்தில் விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஜனாதிபதியின் வவுனியா வருகையின் போது ஓமந்தை அரச ஊழியர் வீட்டுத்திட்டத்திலே 20 பேருக்கான காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கப்படவுள்ளமையுடன், இவை கிராம அபிவிருத்தி சங்கத்தினருக்கு நெருக்கமானவர்களுக்கே வழங்கப்படவுள்ளதாகவும் இப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.



## இளையோரின் எதிர்காலம் இன்றே அமைப்பின் ஏற்பாட்டில் போதைக்கு எதிரான விழிப்புணர்வு சைக்கிள் பயணம்!



இளையோரின் எதிர்காலம் இன்றே அமைப்பின் ஏற்பாட்டில் போதைக்கு எதிரான விழிப்புணர்வு சைக்கிள் பயணம் முன்னெடுக்கப்பட்டது.

கிளிநொச்சி வைத்தியசாலை முன்பாக ஆரம்பமான பயணம் ஏ – 9 வீதி ஊடாகப் பயணித்து, இரத்தினபுரம், கணேசபுரம் பகுதி ஊடாக மாவட்ட செயலகம் வரை சென்று நிறைவடைந்தது.

கிளிநொச்சி நகர வட்டாரத்தை முன்னுரிமைப்படுத்தி ஆரம்பமான மேற்படி பயணம், மாவட்டத்தில் காணப்படும் போதைப்பொருள் பயன்பாட்டி லிருந்து இளம் சமூகம் விடுதலை பெறும் வகையில் முன்னெடுக் கப்பட்டது.

இதன் போது, பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் மத்தியில் பயணம் தொடர்பில் விழிப்புணர்வை பெற்றனர்.

இதன்போது, துண்டு பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன.

இந்தப் பயணத்தில், சமூக செயற்பாட்டாளர்கள், இளைஞர்கள், யுவதிகள் என பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

நிறைவில் கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் க.சிறிமோகனிடம் மகஜர் ஒன்றையும் கையளித்தனர்.

## கொள்கை விடயங்களில் கருத்துவேறுபாடிருந்தாலும் நல்ல திட்டங்களுக்கு பூரண ஆதரவு வழங்குங்கள்!

### பிரதமர் உருக்கம்



நாடாளுமன்ற உறுப்பினர்கள் சம்பிரதாய அரசியலில் இருந்து விலகி, நாடு எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண ஒன்றிணைந்து செயற்பட வேண்டுமென பிரதமர் தினேஷ் குணவர்தன அழைப்பு விடுத்துள்ளார்.

பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதற்கும் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் தெளிவான பாதையையும் திசை யையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வகுத்துள்ளார் எனப் பிரதமர் தெரிவித்துள்ளார்.

2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே பிரதமர் தினேஷ் குணவர்தன இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

கொள்கை விடயங்களில் எவருக்கும் கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். ஆனால் புதிய வரவு – செலவுத் திட்டத்தில் ஏற்றுமதியை அதிகரிப்பது, சுற்றுலாத்துறையை ஊக்குவித்தல் மற்றும் வெளிநாட்டு முதலீடுகளை ஈர்ப்பதற்கான விடயங்களுக்கு ஆதரவை வழங்கலாம். – என்றார்.

எனவே மக்களின் இன்னல்களைப் போக்கும் மற்றும் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துவதற்கு நாடாளுமன்றம் ஜனாதிபதிக்கு பங்களிப்பை வழங்க வேண்டும் என பிரதமர் தினேஷ் குணவர்தன கேட்டுக்கொண்டுள்ளார்.

# நாட்டிலுள்ள 150 அரச கூட்டுத்தாபனங்கள் நாடாளுமன்றுக்கு அறிக்கை அனுப்பவில்லை!

### பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவிப்பு

நாட்டில் உள்ள 150 அரச கூட்டுத்தாபனங்கள் இன்னும் தமது அறிக்கைகளை நாடாளுமன்றத்துக்கு அனுப்பவில்லை என பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார். நாட்டை முன்னோக்கி நகர்த்தும் செயற் பாட்டில் வெற்றியடைவதற்கு சகலரும் ஜனாதிபதிக்கு ஆதரவளிக்க வேண்டும் எனவும் பிரதமர் கேட்டுக்கொண்டார். 2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் மீதான இரண்டாம் நாள் விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

## அமைச்சுப் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பலர் இன்னும் அமைச்சுப் பதவி கிடைக்காமல் விரக்தியில் உள்ளனர். அவர்கள் தொடர்ச்சியாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றனர். ஆனால், ஜனாதிபதியோ அசைவதாக இல்லை. இன்று நியமனம், நாளை நியமனம் என்று செய்திகள் மட்டும் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. அது இவர்களை ஆறுதல்படுத்துவதற்காக ஜனாதிபதியின் தரப்பு செய்யும் வேலை என்று அறியமுடிகின்றது.

அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுப் பதவிகள் கேட்டு 12 பேரின் பெயர்களை 'மொட்டு'க் கட்சி ஜனாதிபதியிடம் கொடுத்துள்ளது. ஆனால், ஜனாதிபதி அவர்களுக்கு அமைச்சுப் பதவிகளைக் கொடுப்பதற்கு விருப்பவில்லை என்றும், அந்தப் பட்டியலில் சிக்கலுக்குரியவர்களின் பெயர்களும் இருப்பதால் அவர் இழுத்தடிக்கின்றார் என்றும் கூறப்படுகின்றது.

அதேநேரம், 12 அமைச்சர்களையும் 'மொட்டு'க் கட்சியில் இருந்தே நியமிப்பதற்கு ஜனாதிபதிக்கு விருப்பவில்லை என்றும், அமைச்சுப் பதவிகளைப் பயன்படுத்தி ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்தும் ஏனைய சில கட்சிகளில் இருந்தும் சிலரை வளைத்துப் போடுவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க காய்நகர்த்தி வருகின்றார் என்றும் உள்ளகத் தகவல்களில் இருந்து அறியமுடிகின்றது.

ஜனாதிபதியின் இந்த முயற்சி சாத்தியமாகும் பட்சத்தில் அவர்களுக்கு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுப் பதவிகள் கொடுக்க வேண்டி வரும். அதற்காகத்தான் இவ்வாறு இழுத்தடிக்கின்றார் என்று அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் கூறுகின்றன.

இதை விரும்பாத 'மொட்டு'க் கட்சியின் அந்த 12 பேரும் ஜனாதிபதிக்கு கடும் அழுத்தத்தைப் பிரயோகித்து அந்தப் பதவிகளைப் பெறுவதற்கு வியூகம் ஒன்றை வகுத்துள்ளார்கள். வரவு – செலவுத் திட்டத்தை எதிர்த்து வாக்களிப்பதுதான் அந்த வியூகம் என்று சொல்லப்படுகின்றது.

வரவு – செலவுத் திட்ட வாக்களிப்புக்கு முன் அமைச்சுப் பதவிகளை வழங்க வேண்டும். இல்லாவிட்டால் அவர்கள் எதிர்த்தே வாக்களிப்பார்கள் என்று அவர்களது வட்டாரம் தெரிவிக்கின்றது.

## ரணிலையும்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்தப் கோப்புக்களில் எங்களது பெயர்கள் இருப்பது உண்மை. ஆனால், உள்ளே விடயம் ஒன்றும் இல்லை என்கிறார்கள் 'மொட்டு'க் கட்சி எம்பிக்கள். இது உண்மையா?' என்று கேட்ட கேள்விக்குப் பதிலளித்தபோதே அநுரகுமார திஸாநாயக்க மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஆம் அவர்கள் அஞ்சமாட்டார்கள். இந்த ஊழல்வாதிகள் எந்த அரசு வந்தாலும் அந்த அரசில் போய் ஒட்டிக் கொள்வார்கள். இதனால் அவர்களுக்குப் பாதுகாப்பு கிடைக்கின்றது. தொடர்ந்து அவர்களது வேலையைச் செய்கின்றார்கள். இவர்கள் தண்டிக்கப்படுவதில்லை. மக்கள்தான் இந்த ஊழல்வாதிகளுக்கு முடிவு கட்ட வேண்டும். ஊழல்வாதிகள் ஒருபோதும் இன்னோர் ஊழல்வாதிக்குத் தண்டனை வழங்க மாட்டார்கள். மஹிந்தவுக்கு ரணில் தண்டனை வழங்கமாட்டார். ரணிலுக்கு மஹிந்த தண்டனை வழங்கமாட்டார். இந்த விடயத்தில் நாம் எமது பொறுப்பை நிறைவேற்றி இருக்கின்றோம்.

ஊழல்வாதிகளுக்கு ஊழல் புரிவதற்காக வாக்களித்து விட்டு ஏன் திருடர்களைப் பிடிக்கவில்லை என்று மக்கள் எங்களிடம் கேட்பது நியாயமா? எங்களுக்கு அதிகாரத்தை வழங்கினால் திருடர்கள் அனைவரும் உள்ளே இருப்பார்கள். இவர்களுக்குத் தண்டனை கிடைப்பதாக இருந்தால் அது எங்களது அரசால் மட்டுமே முடியும். அதுவரை எதுவும் நடக்காது. இவர்கள் திருடிக் கொண்டே இருப்பார்கள்.

இந்த ஊழல்வாதிகளின் மத்தியில் அரசியல்வாதிகள், ஊடக நிறுவனங்களின் உரிமையாளர்கள், வியாபாரிகள், அரச அதிகாரிகள், பாதுகாப்பு அதிகாரிகள் ஆகியோர் உள்ளனர்.

சஜித் பிரேமதாஸ ஊழல்வாதிகள் பற்றி பேசுகின்றார். அவரது மேடையில் இருக்கின்ற பாதிப்பேர் ஊழல்வாதிகள். அவரால் எப்படி ஊழலை ஒழிக்க முடியும்?

குழந்தைகளுக்கு பால்மா கிடைக்காமல் போனதும் – நாடு கடனில் சிக்கி இருப்பதும் – தொழில்சாலைகள் மூடப்பட்டுக்கொண்டு செல்வதும் – மக்களால் மூன்று நேரம் சாப்பிட முடியாமல் இருப்பதும் – மருந்துகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதும் இந்த ஊழலால்தான். ராஜபக்ச குடும்பம் ஊழல்வாதிகள் என்று நாம் அன்றே சொன்னோம். இன்று அவர்கள் திருடர்கள்தான் என்று முழு நாடும் சொல்கின்றது.

எனது கையில் பல ஊழல்வாதிகளின் கோப்புக்கள் உள்ளன. எங்களுக்கு அதிகாரத்தை வழங்கினால் அவர்கள் அனைவரையும் சிறைக்குள் தள்ளுவோம் – என்றார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A , கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 17.11.2022 இல் வெளியிடப்பெற்றது.